1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வினா எண் 407 எடுத்துக்கொள்ளப்படுகிறது. வினா எண் 407, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

407—

கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைத்தல்

***37155**—திரு எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், 18-புதுக்குடி கிராமத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், 18-புதுக்குடி கிராமத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18-புதுக்குடி கிராமத்தைச் சுற்றிலும் கடலங்குடி, கீரங்குடி, கடமங்குடி, கூந்தலூர், நெய்குன்னம் போன்ற பல்வேறு கிராமங்கள் அமைந்துள்ளன. எனவே, அந்த கிராமங்களுடைய அத்தியாவசியத் தேவையைக் கருதியும், சுற்றுப்புறங்களில் இருக்கின்ற விவசாயிகளுடைய நலனைக் கருதியும், அவர்கள் வளர்க்கும் கால்நடைகளின் நலன் கருதியும், இங்கே கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-புதுக்குடி கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 4,289 ஆகும். அந்த 18-புதுக்குடி கிராமத்தின் அருகில் 12 கிலோ மீட்டர் தொலைவில் திருவீழிமிழலை கால்நடை மருந்தகமும், 13 கிலோ மீட்டர் தொலைவில் குடவாசல் கால்நடை மருந்தகமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் மணவாளநல்லூர் மற்றும் வடவேலூர் கால்நடை மருத்துவக் கிளை நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவில் கண்டரமாணிக்கம் கால்நடை மருத்துவக் கிளை நிலையமும் இயங்கி வருவதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள இடத்தில் புதிய கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்தை முழுமையாக நம்பியுள்ள மாவட்டம் அது. அந்த மாவட்டத்தில் விவசாயிகள் அதிகமாக வாழ்கிறார்கள். விவசாயத்தை முழுமையாக நம்பியுள்ள காரணத்தால், கால்நடைகளை அதிகமாக வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 18-புதுக்குடி கிராமத்திலேயும், அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலேயும், கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எனவே, அங்கே இருக்கின்ற கால்நடைகளின் எண்ணிக்கையை கருத்திலே கொள்ளாமல், அந்த எண்ணிக்கைக்கு விதிவிலக்கு அளித்து, - மேலும் தூரத்தை கணக்கிலே சொன்னார்கள் - அந்த தூரத்திற்கும் விதிவிலக்கு அளித்து, இந்தக் கிராமத்திலே கால்நடை கிளை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவசியம் என்று கருதுவார்களானால், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தீர்மானத்தை நிறைவேற்றி, எந்த ஊருக்கு அந்தக் கிளை நிலையம் தேவை என்பதையும் அதற்கு இலவசமாக ஒரு ஏக்கர் நிலத்தையும், அதற்கு இடையில், மருத்துவமனை கிளை நிலையம் நடத்துவதற்கு வாடகையில்லாக் கட்டிடம் ஒன்றையும், பங்குத் தொகையையும் செலுத்தினால், நிதிநிலைமைக்கு ஏற்றவாறு அது பரிசீலிக்கப்படும்.

411—

புதுக்கோட்டை தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

*** 25198**—திரு. சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, சங்கம்விடுதி ஊராட்சி மற்றும் புதுப்பட்டி ஊராட்சி செவந்தாள்பட்டி கிராமப் பகுதிகளுக்கு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு ஆழ்குழாய்க்கிணறுள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், திட்டம் உள்ளது.